மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி. திட்டம் என்பது மத்திய அரசின் மூலம் மானிய உதவியோடு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வழங்குகின்ற ஒரு திட்டம். இந்தத் திட்டம் 1-4-1999 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளிலிருந்து எடுத்து, அதற்குப் பதிலாக, கிராமப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் என்று பல்வேறு திட்டங்களை எல்லாம் ஒன்று சேர்த்து சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் குழுக்களாகச் செயல்படுகின்ற குழுக்களுக்கு, மானிய உதவியுடன் கடன் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

100—

விற்பனைச் சங்கம்

***2192—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி வட்ட தலைமையிடத்தில் கூட்டுறவு விவசாய விளைபொருள் விற்பனைச் சங்கம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திட்டம் எதுவும் இல்லை.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1991-96-லே முதலமைச்சராக இருந்தபோது, பாப்பிரெட்டிப்பட்டி என்ற பகுதியை. அரூர் வட்டத்திலிருந்து பிரித்து, தனி வட்டமாக அமைத்துக் கொடுத்திருந்தார்கள். அந்த பாப்பிரெட்டிப்பட்டி பகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள்

2002 ஏப்ரல் 5]

அதிகமாக விவசாயம் செய்து பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே தங்களுடைய தேவைக்குப் போக, மீதம் இருக்கின்ற விவசாய விளைபொருட்களை விற்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் பல கிலோ மீட்டர் வந்து, அதை விற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், வியாபாரிகள் விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்றபோது, விவசாயிகளுடைய வயிற்றிலே அடித்து வாங்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதியிலே பருத்தி, கடலை, மஞ்சள் போன்ற பல நல்ல விளைபொருள்களை விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பெருமை சேர்க்கிற வகையிலே அமைந்திருக்கிற நமது அரசு அவர்களுடைய தாக்கத்தைப் போக்குவதற்காக அங்கே வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை, கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டியை அமைத்துக் கொடுக்க நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அதிகப்படியான நன்மைகளைத் தருகிற இந்த ஆட்சி நிச்சயமாக விவசாயிகளினுடைய நலனைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இந்த பாப்பிரெட்டிப்பட்டி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் வேண்டுமென்ற உறுப்பினருடைய கோரிக்கைக்கு, ஏற்கெனவே பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலே அடங்கியிருக்கிறது. இப்போது இயங்குகிற இந்த அரூர் சங்கமே 71.48 இலட்சம் ரூபாய் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. உறுப்பினர் கேட்கிற இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், இரண்டு சங்கங்களாக அது மாறினால், ஏற்கெனவே இருக்கிற நட்டத்தோடு மேலும் பலத்த நட்டம் ஏற்படும் என்கிற காரணத்தினாலே, இந்தக் கோரிக்கையை ஆராய முடியாத நிலையிலே இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இன்னும் நட்டத்தை ஏற்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.